**இலங்கை மத்திய வங்கி - 2019**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை மத்திய வங்கியின் (வங்கி) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள 13(1) ஆம் பிரிவு மற்றும் நாணய விதிகள் (422 ஆம் அத்தியாயம்) சட்டத்தின் 42(2) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன. இக்கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்கியொழுகுதலை பரீட்சிப்பதற்காக பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினால் எனக்கு உதவப்பட்டது.

வங்கியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎ∴ப்ஆர்எஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

சர்வதேச கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் செயற்பாடுகள், ரூபா 55.6 பில்லியன் தேசிய இலாபத்தை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 137.9 பில்லியன் ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 82.3 பில்லியன் வீழ்ச்சி காணப்பட்டது. அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நயம் ரூபா 161.4 பில்லியனால் குறைவடைந்திருந்தமையே இதற்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வங்கியின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வானது கீழ் காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | 2018 | முரண் {சாதகம்/(பாதகம்)} | |
|---|---|---|---|---|
| | ரூபா பில். | ரூபா பில். | ரூபா பில். | சதவீதம் |
| **அந்நியச் செலாவணி நிதிச் சொத்துக்களிலிருந்து வருமானம்** | **76.9** | **3.2** | **73.7** | **2,303.1** |
| வட்டி வருமானம் | 32.9 | 25.5 | 7.4 | 29.0 |
| கைக்கிட்டாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்து நயம்/(நட்டம்) | 42.9 | (18.2) | 61.1 | 335.7 |
| கைக்கிட்டிய விலை மாற்றங்களிலிருந்து நயம்/(நட்டம்) | 1.1 | (4.1) | 5.2 | 126.8 |
| **அந்நியச் செலாவணி நிதிப் பொறுப்புக்கள் மீதான செலவினம்** | **8.5** | **5.4** | **(3.1)** | **(57.4)** |
| வட்டிச் செலவினம் | 8.3 | 5.3 | (3) | (56.6) |
| எதிர்பார்த்த கடன் நட்டங்கள் | 0.2 | 0.02 | (0.18) | (900.0) |
| **தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நயம்/(நட்டம்)** | **(14.6)** | **146.8** | **(161.4)** | **(109.9)** |
| **உள்ளூர் நாணய நிதிச் சொத்துக்களிலிருந்து மொத்தத் தேறிய வருமானம்/(செலவினம்)** | **14.0** | **6.2** | **7.8** | **125.8** |
| **ஏனைய வருமானம்** | **1.7** | **1.7** | **-** | **-** |
| **செயற்பாட்டுச் செலவினம்** | **13.6** | **13.5** | **(0.1)** | **( 0.7)** |
| **வரி** | **0.3** | **1.1** | **0.8** | **72.7** |
| **ஆண்டுக்கான தேறிய இலாபம்/(நட்டம்)** | **55.6** | **137.9** | **(82.3)** | **(59.7)** |

(அ) நாணயச் சட்டச் சட்டத்தின் பிரிவு 41 இன் படி, வங்கியின் வருடாந்த இலாபங்கள் மற்றும் இழப்புகளைக் கணக்கிடுவதில் அந்நிய செலாவணி மீள்திப்பீட்டு நயம் அல்லது நட்டம் சேர்க்கப்படக்கூடாது. ஆகையால், முன்னைய ஆண்டின் ரூபா 8.9 பில்லியன் (தேறிய அந்நிய செலாவணி மீள்மதிப்பீட்டு நயம் ரூபா 146.8 பில்லியன் நீங்கலாக) நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 70.2 பில்லியன் (தேறிய அந்நிய செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டம் ரூபா 14.6 பில்லியன் நீங்கலாக) ஆகக் காணப்பட்டமையால் இலாபத்தில் ரூபா 79.1 பில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துகளின் வருமானம் ரூபா 73.7 பில்லியனாலும் உள்ளூர் நாணய நிதிச் சொத்துகளிலிருந்து தேறிய வருமானம் ரூபா 7.8 பில்லியனாலும் அதிகரித்திருந்தமை இலாபத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு முக்கிய காரணங்களாகும்.

(ஆ) நாணயச் சட்டச் சட்டத்தின் 38 மற்றும் 41 ஆம் பிரிவுகள் மற்றும் நாணய சபையால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் இலாப பகிர்வுக் கொள்கை (2018 முதல் அமுலாக்கப்பட்ட) ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான பகிரப்படத்தக்க இலாபம் ரூபா 25.4 பில்லியன் ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் பகிரத்தக்க இலாபம் காணப்படவில்லை.

அதன்படி, மீளாய்வாண்டிற்கான பகிரத்தக்க இலாபத்திலிருந்து திரட்டிய நிதியத்துக்கு ரூபா 24 பில்லியன் தொகை பகிரப்படடிருந்ததுடன், முன்னைய ஆண்டில் திரட்டிய நிதியத்துக்கு எந்தத் தொகையும் பகிரப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **அ. நிதித்துறை ஒன்றித்தல் நிகழ்ச்சித்திட்டம்** | | |
| அதிகரித்துவரும் பொருளாதாரத் தேவை களை பூர்த்தி செய்வதற்காக உள்வாரி மற்றும் வெளிவாரி எதிர்பாராத நிலை மைகளிற்கு மேம்பட்ட நெகிழ்வுடன் வலுவான வங்கி / வங்கி சாராத நிதி நிறுவனத் துறையை கட்டியெழுப்புவதற்கான குறிக்கோளுடன் வங்கி 2014 சனவரி 17 அன்று நிதித்துறை ஒன்றித்தல் குறித்த முதன்மை திட்டத்தை வெளியிட்டது. அதன்படி, வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகை கம்பனிகள் உட்பட 21 நிறுவனங்களுடன் கூடிய ஒன்றிப்புத் திட்டங்கள் 2020 ஜூன் 30 ஆம் திகதி வரை ரூபா 78 மில்லியன் செலவழித்து முடிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், 12 நிறுவனங்களுடனான ஒன்றிப்புத் திட்டங்க ளிற்காக வங்கி ரூபா 49 மில்லியனை செலவிட்டிருந்த போதிலும், அத்திட்டங்கள் 2020 ஜூன் இறுதி வரை கூட முடிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக மேற்குறித்த செலவினத்துக்கு மேலதிக மாக, வங்கி ரூபா 59 மில்லியன் தொகையினை மேற்குறித்த ஒன்றிப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 20 நிறுவன ங்கள் தொடர்பான தகவல் உடன்படிக் கைகள், உரிய விடாமுயற்சி, மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்களை தயாரிப்பதற்காக செலவிட்டிருந்தது. | 2015 க்குப் பின்னர் அரசாங்கக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களுடன், ஒன்றிப்புத் திட்டத்தில் வங்கி யின் ஈடுபாட்டை இடைநிறு த்த நாணய சபை முடிவு செய்தது.<br>தற்போது, 2014 இல் ஒன்றிப்புத் திட்டத்தை ஏற்க னவே தொடங்கியுள்ள 4 உரிமம்பெற்ற நிதி கம்பனி கள் (எல்.எ.ப்.சி) கொடுக் கல் வாங்கல்களை முடிக் கும் பணியில் ஈடுபட்டுள் ளன. | முழுமையற்ற ஒன்றித்தல் திட்ட ங்களை பூரணப்ப டுத்துவதற்கு சாத் தியமான நடவடிக் கைகளை எடுத்த ல் வேண்டும். |
| **ஆ. நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்** | | |
| i. நிதிக் கம்பனிகள் வங்கியின் நாணய சபையால் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வையிடப்ப டுகின்றன. நிதி வணிகச் சட்டத்தின் பிரிவு 12 (1) இன் படி, அத்தகைய நிதிக் கம்பனிகளின் வணிக மற்றும் கூட்டிணைப்பு விவகாரங்களின் எந்தவொரு அம்சமும் நடத்தப்பட வேண்டிய விதம் குறித்து நிதிக் கம்பனிகளுக்கு நாணய சபை வழிகாட் டுதல்களை வழங்க முடியும். எவ்வாறாயினும், 2020 அக்டோபர் இறுதி வரை கூட நிதி வணிகச் சட்டத்தின் பிரிவு 12 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி எட்டு விடயங்களை | முழு வங்கி சாராத நிதி நிறுவனங்கள் துறையின் தேவைகளைப் பொறுத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனி களின் வணிக செயற்பாடு கள் குறித்த பொதுவான வழிகாட்டல்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.<br>எவ்வாறாயினும், சட்டரீதி யான பரிசோதனைகள் / களநிலை கண்காணிப்பை மேற்கொள்கையில், கம்பனி கள் சரியான இடர் | சிக்கல்கள் நிகழு முன் நிதிக் கம்ப னிகளின் ஒழுங்கு முறை மற்றும் மேற்பார்வைக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற வழிகாட்டல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முழுமையாக உள்ளடக்கு வதற்கான வழிமுறைகள் வெளியிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.<br><br>மேற்கூறிய விடயங்களில் உள்ள வழிகாட்டல்களான விசேடமாக கடன்கள், கடன் வசதிகள் அல்லது அத்தகைய கம்பனிகளால் வழங்கப்பட்ட ஏனைய வகையான நிதிசார் தங்குமிட வசதிகள் மீதான அதிகபட்ச வட்டி வீத வழிகாட்டல்கள், அத்தகைய கம்பனிகளின் இயக்குநர்கள் அல்லது ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் மீதான வழிகாட்டல்கள் மற்றும் நிதிக் கம்பனி ஒன்றிலுள்ள பங்கு மூலதனத்தின் ஒரு நபர் வைத்திருக்கக்கூடிய அதிகபட்ச முதலீட்டுச் சதவீதம் மீதான வழிகாட்டல்கள் என்பன நிதிக் கம்பனிகளின் கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வை க்கும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.<br><br>அத்துடன், கடன் அட்டை முற்பணங்கள் மற்றும் அடகு வட்டி விகிதங்களை குறைக்க 2020 ஆகஸ்ட் 24 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளுக்கு நாணய சபை உத்தரவு பிறப்பித்திருந்தது. இருப்பினும், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிதிக் கம்பனிகள் மேற்படி சட்டத்தின் கீழ் கடன் அட்டை முற்பணங்கள் மற்றும் அடகுபிடித்தல் முற்பணங்களை வழங்குகின்ற போதிலும் அவற்றிற்கு இந்த வழிகாட்டல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ நடைமுறை களைப் பயன்படுத்தவில்லை என்பதையும், சரியான வணி க நடத்தைகள் இல்லை என்பதையும் வங்கி அவதா னித்தால், அந்த கண்டு பிடிப்புகளின் அடிப்படையில், குறிப்பிட்ட கம்பனிக்கான வழிகாட்டல்கள் வழங்கப் படுகின்றன. | |
| ii. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வங்கியின் நாணய சபையால் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட மூன்று நிதி நிறுவனங்களை மூடிவிடும் செயற்பாடுகள் 2020 அக்டோபர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. (கலைப்போர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை). இரத்துச் செய்யப்பட்ட தினத்திலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கலைத்தல் செயல்முறை யைத் ஆரம்பிக்குமாறு 2018 மார்ச் 05 முதல் நடைமுறைக்கு வரும் விதத்தில் உரிமம் இரத்துச் செய்யப்பட்ட ஒரு நிதிக் கம்பனிக்கு நெறிப்படுத்தல் வழங்கப்பட்டிரு ந்ததுடன் அந்தக் கம்பனி குறிப்பிட்ட காலத்திற்குள் கலைத்தல் செயல்முறையை ஆரம்பிக்கத் தவறியிருந்தது. அத்தகைய சூழ்நிலையில், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பிரிவு 37 (6) இன் படி வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்கள பணிப்பாரால் கலைத்தல் நடவடிக்கையாக வழக்கொன்றை தாக்கல் செய்ய முடியும். இருப்பினும், கலைத்தலுக்கான மணுக்கள் கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில் 2019 டிசம்பர் 03 அன்றே தாக்கல் செய்யப்பட்டிருந்தன.<br><br>மேலும், இரத்துச் செய்யப்பட்ட தினத்திலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கலைக்கும் | கலைப்பு செயல்முறையைத் ஆரம்பிப்பதற்கு இரண்டு நிதி கம்பனிகளிற்குரிய நீதிமன்ற உத்தரவுகளுக்காக வங்கி காத்திருக்கின்றது.<br>ஒரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு வழங்கப்பட்டி ருந்த உரிமம் 2019 ஆம் ஆண்டில் நாணய சபையால் இரத்து செய்யப்பட்டதுடன் 2019.10.09 ஆந் திகதியிலி ருந்து 30 நாட்களுக்குள் கம்பனியை கலைக்கும் செயல்முறையைத் தொடங் குமாறு கம்பனியின் பணிப்பா ளர்கள் சபை பணிக்கப்பட்டி ருந்தது. அதன்படி, கம்பனி 2019.11.08 அன்று வணிக உயர் நீதிமன்றத்தில் கலை த்தல் மணுவை தாக்கல் செய்திருந்ததுடன் தற்போது இதுவும் விசாரிக்கப்பட்டு வருகின்றது. | கலைத்தல் செயல் முறையை விரைவு படுத்துவதற்கு தேவையான நடவ டிக்கைகளை எடுத் தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயல்முறையைத் தொடங்க 2018 ஜூலை 25 முதல் உரிமம் இரத்துச் செய்யப்பட்ட மற்றொரு நிதி கம்பனிக்கு ஒரு நெறிப்படுத்தல் வழங்கப்பட்டிருந்த போதி லும், அந்த கம்பனி காலத்திற்குள் கலைத்தல் செயல்முறையைத் தொடங்கத் தவறியிருந்தது. இருப்பினும், 2020 அக்டோபர் 07 அன்றே கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில் கலைத்தலுக்கான மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | | |
| **இ.** | **குத்தகை கம்பனிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்** | | |
| i. | குத்தகை கம்பனிகள் 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்டத்தின் கீழ் வங்கியின் நாணய சபையால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வையிடப்படு கின்றன. நிதி குத்தகை சட்டத்தின் பிரிவு 34 ன் படி, வங்கி சாரா நிதிக் கம்பனிகளின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பா ளருக்கு பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வினைத்திறமையான நியமங்கள் தாபிக்கப் படுவதனை உறுதிசெய்யும் நோக்கத்திற்காக அவர் தேவைப்படும் எனக் கருதுகின்ற இவ்வாறான பொதுவான நெறிமுறைகளை வெளியிடுவதற்கான அதிகாரம் காணப்ப டுகின்றது. எவ்வாறாயினும், 2020 அக்டோபர் இறுதி வரை கூட நிதி குத்தகை சட்டத்தின் பிரிவு 34 இல் குறிப்பிடப்பட் டுள்ளபடி நான்கு விடயங்களை முழுமையாக உள்ளடக்குவ தற்கான நெறிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.<br><br>மேற்கூறிய விடயங்களிலுள்ள நெறிமுறை கள் விசேடமாக பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளால் விதிக்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளுக்கான அதிகபட்ச வீத ங்கள், குத்தகை கம்பனிகளின் ஒழுங்குப டுத்தல் மற்றும் மேற்பார்வைக்கு முக்கியம் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | குத்தகை கம்பனிகளின் வணிக நடவடிக்கைகள் மீதான பொதுவான நெறிமு றைகள் தேவைப்படும் போது வழங்கப்படுகின்றன. இருப்பினும், சட்டரீதியான பரிசோதனைகள் / கள நிலை கண்காணிப்பை மேற் கொள்கையில், கம்பனிகள் சரியான இடர் முகாமைத் துவ நடைமுறைகளைப் பயன்படுத்தவில்லை என்ப தையும், சரியான வணிக நடத்தைகள் இல்லை என்ப தையும் வங்கி அவதானித் தால், அந்த கண்டுபிடிப்பு களின் அடிப்படையில், குறிப்பிட்ட கம்பனிக்கான வழிகாட்டல்கள் ஒவ்வொ ரு விடயம் தொடர்பாகவும் வழங்கப்படுகின்றன. | சிக்கல்கள் ஏற்படு வதற்கு முன்பே குத்தகைக் கம்ப னிகளின் ஒழுங்கு முறை மற்றும் மேற்பார்வைக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற வழிகாட்டல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| ii. | 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்டத்தின்படி, குத்தகைதாரர்கள், குத்தகைபெறுநர் மற்றும் வழங்குனர் ஆகியோரின் கடமைகள் பிரிவு 11 முதல் 31 வரை விவரிக்கப்பட்டுள்ளன. பிரிவு 11 ன் படி, நிதிக் குத்தகையின் கீழ் குத்தகைபெறுநருக்கு வழங்கப்பட்ட உபகரணங்களின் குறுக்கீடற்ற மற்றும் அமைதியான உடைமை மாத்திரமே குத்தகைதாரரின் உரிமையாகும். பிரிவு 15 இன் படி, நிதி குத்தகை காலம் காலாவதியாகும் போது, குத்தகைதாரர் உபகரணங்களை நியாயமான முறையில் மற்றும் நிபந்தனைக்கு உட்பட்டு, நிதி குத்தகைத் தரப்பினரால் ஒப்புக்கொண்ட எந்த மாற்றங்களுக்கும் உட்பட்டு குத்தகைபெறுநருக்கு வழங்குதல் வேண்டும். உட்பிரிவு இல. 20 இன் படி, குத்தகைபெறுநரின் | நிதி குத்தகை சட்டத்தில் உள்ள விதிகளை வங்கி ஆராய்ந்து, தேவைப்பட்டால் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி குத்தகை சட்டத்தை திருத்து வதற்கான தேவை யிருப்பின், அதற் கான செயல்முறை யை விரைவுபடுத் துதல் வேண்டும். |

எந்தவொரு நிபந்தனை மீறலின் போதும், வழங்கப்பட்ட உபகரணங்களை பறிமுதல் செய்வற்கும், அத்தகைய சேதங்களை அறவிடுவதற்கும் குத்தகைதாரருக்கு உரிமை உண்டு,

சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள விதிகளின்படி, உபகரணங்களை வைத்திருத்தல், பணத்தை அறவிடுதல் மற்றும் அறவிடப்பட்ட சேதங்கள் ஏதேனும் இருந்தால், குத்தகை பெறுநர் நிதி குத்தகையின் கீழ் பட்டியலிடப்பட்ட படி உரிய தொகையை செலுத்தியுள்ளாரோ அல்லது இல்லையோ அத்தகைய சகல நலன்களையும் அறவிடுவதற்கு குத்தகைதாரருக்கு உரிமை உள்ளதுடன் நிதிக் குத்தகையின் கீழ் ஒட்டுமொத்த பொறுப்புகளுக்கும் குத்தகை பெறுநருக்கு ஒதுக்கப்படுகிறது. எனவே, சட்டத்தில் ஏதேனும் திருத்தங்களைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை இனங்காணப்தற்காக சட்டத்தை மீளாய்வு செய்தல் வேண்டும்.

**ஈ. நுண்பாகநிதி வணிகத்தை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குதல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.**

நுண்பாக நிதி வணிகத்தை மேற்கொள்ளும் கம்பனிகளின் உரிமம், ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வையானது 2016 இன் 06 ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ் 2016 ஜூலை 15 முதல் வங்கியின் நாணயச் சபையால் அமுல்படுத்தப்படு கின்றது. வைப்புக்களை ஏற்று, குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிதி சேவைகளை வழங்கும் கம்பனிகள் மற்றும் நுண்பாக தொழில்முயற்சிகள் (நுண்பாக நிதி வணிகங்கள்) இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெறுதல் வேண்டும். அதன்படி, மேற்குறித்த சட்டம் அமுல்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2020 ஆகஸ்ட் இறுதி வரை நான்கு கம்பனிகள் மாத்திரமே நுண்பாக நிதி வணிகத்தை மேற்கொள்வதற்கான உரிமங்களைப் பெற்றுக் கொண்டிருந்தன. வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்ளாத, ஆனால் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு நிதி சேவைகளை வழங்கும் கம்பனிகள் மற்றும் நாட்டிலுள்ள நுண்பாக தொழில்முனைவோர்கள் இச் சட்டத்தின் கீழ் உரிமம் பெறத் தேவையில்லை. எனவே, அவ்வகையான கம்பனிகள் இச்சட்டத்தின் கீழ் வங்கியின் நாணய சபையால் கட்டுப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுவதில்லை.

நுண்பாக நிதி மற்றும் பணப்பரிமாற்றத் தொழில் களில் ஈடுபடும் நிறுவனங்க ளுக்கு உரிமம் வழங்குவ தற்கும், ஒழுங்குபடுத்துவத ற்கும், மேற்பார்வை செய் வதற்கும், பாராளுமன்றச் சட்டமான நுண்பாக நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை ப்படுத்தல் அதிகாரசபை சட்டத்தின் ஊடாக (முன் மொழியப்பட்ட சட்டம்) கடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையை நிறுவுவத ற்கு முன்மொழியப்பட்டு ள்ளது, ‘நுண்பாக நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை ப்படுத்தல் அதிகாரசபை சட்டம்’ இன் அங்கீகரிக்க ப்பட்ட வரைவை விரைந்து சட்டமாக்குவதற்காக 2019. 09.26 அன்று நிதி அமைச்சின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ் வராத நுண்பாக நிதிக் கம்பனிக ளை ஒழுங்குபடுத் துவதற்கும் மேற் பார்வையிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண் டும்.

**உ. பொது படுகடன் முகாமைத்துவம்**

i. வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தின் நோக்கம், விவேகமான அளவிலான இடருடன் ஒத்துப்போகக்கூடிய மிகக் குறைந்த கிரயத்தில் அரசாங்கத்தின் நிதித் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதாகும்.

ஏலமிடல் காலத்தில் நிலவி ய பேரிணப் பொருளாதார சூழல், திறைசேரியின் நிதித் தேவை, ஏலமிடல் முறை, சந்தை நிலைமைகள் மற்று ம் சந்தை முன்னேற்றங்கள்

எல்லா சந்தர்ப்பங் களிலும் விவேக மான அளவிலான இடருடன் ஒத்துப் போகக்கூடிய

எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட திறைசேறி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் சில சந்தர்ப்பங்களில் விவேகமான அளவிலான இடருக்கு இணங்க மிகக் குறைந்த கிரயத்தில் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 14 திறைசேரி உண்டியல்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட உழைப்பு விகிதங்கள் இரண்டாம் தரச் சந்தையில் 05 அடிப்படை புள்ளிகள் முதல் 71 அடிப்படை புள்ளிகள் வரையிலான வீச்சில் அதனையொத்த முதிர்வுடைய கடன் பத்திரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உழைப்பு விகிதங்களை விட அதிகமாக இருப்பது அவதானிக் கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 22 திறைசேரி முறிகளில் 16 முறிகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட உழைப்பு விகிதங்கள் இரண்டாம் தரச் சந்தையில் 4 அடிப்படை புள்ளிகள் முதல் 84 அடிப்படை புள்ளிகள் வரையிலான வீச்சில் அதனையொத்த முதிர்வுகளுக்கான உழைப்பு விகிதங்களை விட அதிகமாகக் காணப்பட்டமை அவதாகனிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 16 இலங்கை அபிவிருத்தி முறிகளில் 10 முறிகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட உழைப்பு விகிதங்கள், இலங்கை பிணை முறிகளின் ஒத்த முதிர்ச்சிக்காக இரண்டாம் தரச் சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட உழைப்பு விகிதங்களுக்கு மேல் 24 அடிப்படை புள்ளிகள் முதல் 126 அடிப்படை புள்ளிகள் வரையான வீச்சில் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது.

ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே அனைத்து கேள் விச் சபை தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட ஏலத்திலி ருந்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தொகை மற்றும் அதனுடன் தொடர்புடைய இறுதிஎல்லை மற்றும் நிறை யளித்த சராசரி உழைப்பு விகிதங்கள் (WAYRs) தொடர்பிலான கேள்விச் சபையின் தீர்மானங்கள் மீது திறைசேரியின் இறுக்கமான நிதித் தேவைப்பாடு செல்வா க்குச் செலுத்துகின்றது.

நிலவுகின்ற திறைசேரியின் இறுக்கமான நிதித்தேவைச் சூழ்நிலைகள், திறைசேரி யின் காசோட்ட முகாமைத்து வத்திற்கு வசதியளிப்பதற் காக உயர்வான கிரயத்தி லேனும் நிதியினை சேகரி க்க வேண்டிய நிலைமை யை உருவாக்குகின்றது.

சர்வதேச மூலதன சந்தை களின் முன்னேற்றங்கள் இலங்கை அபிவிருத்தி முறி களுக்கான (எஸ்.எல்.டி.பி) வட்டிவீத எதிர்பார்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின் றன, எனவே சர்வதேச பிணைப் பத்திரங்களின் (ஐ.எஸ்.பி) இரண்டாம் தரச்சந்தை விகிதங்களை எஸ்.எல்.டி.பி உழைப்பு விகிதங்களுடன் மாத்திரம் ஒப்பிடுதல் சிறந்ததல்ல. எஸ்.எல்.டி.பி.க்கள் பிரதான மாக ஒரு உள்நாட்டு கடன் கருவியாக இருப்பதுடன், ஐ.எஸ்.பி.க்கள் வெளிநாட டுக் கடன் கருவியாக காணப்படுகின்றது.

உள்நாட்டு அந்நியச் செலாவணி திரவத்தன்மை, நாயணமாற்று வீத நடத்தை மற்றும் உள்நாட்டு சந்தை முன்னேற்றங்கள் ஆகியவை எஸ்எல்டிபி கிரயத்தில் செல்வாக்குச் செலுத்துகின் றன.

மிகக் குறைந்த கிரயத்தில் அரசா ங்கத்திற்கு நிதி திரட்டுவதற்கான அனைத்து முயற்சி களையும் எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | 2018 ஆம் ஆண்டில், குறிப்பாக 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், எஸ்.எல்.டி.பி உட்பட அனைத்து அரசாங்க பிணைப் பத்திரங்களினதும் உழைப்பு விகிதங்கள் அதிகரித்திருந்த அதேவேளை சந்தை முன்னேற்றங்கள் / நிபந்தனைகள் காரணமாக வழங்கப்பட்ட அளவுகளைக் கூட ஏற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. | |
| ii. | முன்னைய ஏலத்தில் இதனையொத்த முதிர்வுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட உழைப்பு வீதம், இதனையொத்த முதிர்ச்சிகளுக்காக இரண்டாம் தரச் சந்தையில் நிர்ணயிக் கப்பட்ட உழைப்பு வீதம் மற்றும் ஒத்த முதிர்வுகளுக்கான இரு முறைக் கூறுவிலை கோரல்களை விட கூடிய உழைப்பு விகிதத்தில் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டு ள்ள சந்தர்ப்பங்களில், புதிய திறைசேரி முறிகள் ஏலமிடல் முறையின் படி கட்டம் I இன் கீழ் முழுமையான தொகையை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, கட்டம் I இன் கீழ் 60 சதவிகிதம் அல்லது அதற்கு மேற்பட்டதை ஏற்றுக்கொள்வதன் மூலமும், மீதமுள்ள தொகையினை II ஆம் கட்டம் மற்றும் III ஆம் கட்டத்தின் கீழ் வழங்குவதன் மூலமும் பெறக்கூடியதா கவிருந்த சேமிப்பு / நன்மை (தவிர்க்கக்கூடிய இழப்பு) பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மூன்று திறைசேரி முறிகளிலிருந்து ரூபா 1,661 மில்லியன் நட்டத்தை / இழப்பினை தவிர்க்கக் கூடியதாக இருந்திருக்கும். | ஆர்வலர்களிடையே காணப்படுகின்ற ஏற்பாட்டைக் கருத்திற்கொண்ட பின்னர், வழங்கல் செயல்முறையின் II ஆம் கட்டம் அல்லது III ஆம் கட்டத்தின் கீழ் வழங்கல்கள் இருந்தபோதிலும், I ஆம் கட்டத்தில் வழங்கப்பட்ட தொகைக்குள் அனைத்து நியாயமான சந்தை ஏலங்களையும் ஏற்றுக்கொள்வதற்கு கேள்விச் சபையை கட்டாயப்படுத்த ஆர்வலர்களுடனான அந்தக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. | விவேகமான அளவிலான இடருக்கு அமைய மிகக் குறைந்த கிரயத்தில் அரசாங்கத்திற்கு நிதி திரட்டுவதற்கு கிடைக்கக் கூடிய அனைத்து மாற்று வழிமுறைகளையும் பயன்படுத்திக் கொள்தல் வேண்டும். |
| iii. | திறைசேரி முறிகளிற்கான ஏலத்தின் III ஆம் கட்டம் (I ஆம் கட்டத்தில் நிர்ணயிக் கப்பட்ட நிறையளித்த சராசரி உழைப்பு வீதத்தில் முதலாந்தர வணிகர்களிற்கான கட்டாய ஒதுக்கீடு) செயல்வலுப் பெறுவதற்கு, வழங்கப்பட்ட தொகையிலி ருந்து 60 சதவீதம் I ஆம் கட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இந்த விதி பொதுப் படுகடன் அத்தியட்சகரால் 2019 ஜூலை 09 முதல் 70 சதவீதமாக திருத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. 60 சதவீத வரம்பை 70 சதவீதமாக உயர்த்தியமையால் விவேகமான அளவிலான இடருடன் மிகக் குறைந்த கிரயத்தில் அரசாங்கத்திற்கு நிதி திரட்டுவதற்கு இருந்த வாய்ப்பை இது மேலும் கட்டுப்படுத்தியிருந்தமை அவதானிக் கப்பட்டது. | III ஆம் கட்டத்தைத் தூண்டுவதற்காக I ஆம் கட்டத்தில் குறைந்தபட்ச ஏற்றுக்கொள்ளும் அளவை உயர்த்துவதற்கான நியாயத்துவத்துக்கு 2019.06.04 ஆந் திகதி நாணயச் சபை அதன் அங்கீகாரத்தை வழங்கியதுடன் இது III ஆம் கட்டத்தை செயல்படுத்துவதில் சந்தை பங்கேற்பாளர்களிடமிருந்தான கட்டம் I இன் கீழான சந்தை விலை நீக்கம் / உழைப்பு உருவாக்கத்தை மேலும் மேம்படுத்துவதாகவும் உள்ளது. | ஒரு விவேகமான இடருக்கு அமைவாக மிகக் குறைந்த கிரயத்தில் அரசாங்கத்திற்கு நிதி திரட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| iv. | சர்வதேச பிணை முறிகளின் ஏலமிடலின் போது அப்பிணை முறிகளின் இறுதி விலையினை தீர்மானிப்பது தொடர்பில் வழிநடாத்தல் குழுவினதும் வங்கியின் ஆளுநரினதும் வகிபாகத்தை மதிப்பாய்வு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் / அல்லது ஒலிப்பதிவுகள் பராமரிக்கப்பட்டிருக்காமையால், பிணை முறிகளின் இறுதி விலை நிர்ணய வெளிப்படைத்தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | முறிகளின் வழங்கலுக்கான விலை குறித்த தீர்மானங் களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கின்றது. நடைமுறையில், வழிநடத் தல் குழு / கேள்விச் சபை மற்றும் நிதி அமைச்சு (MoF) ஆகியவை மாநாட்டு க்கான அழைப்புகளின் போது விலை தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதலை பிரதிநிதித்துவம் செய்கின் றன. | பிணை முறிகளின் இறுதி விலையின் வெளிப்படைத்தன் மையை உறுதிப் படுத்த தேவை யான நடவடிக்கை களை எடுத்தல் வேண்டும். |
| v. | நாணய விதிகள் சட்டத்தின் (எம்.எல்.ஏ) பிரிவு 113 இன் படி, பொதுப் படுகடனை நிர்வகிக்க இலங்கை மத்திய வங்கி பொறுப்புடடையது. எவ்வாறாயினும், பொதுப் படுகடன் முகாமைத்துவத்தின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளிற்காக நாணய விதிகள் சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுதத்துருவிலான சட்டம் பொதுப் படுகடனை உள்ளடக்கிய கடன் வகைகளை வரையறுத்துரைக்கவில்லை, அல்லது பொதுப் படுகடனிற்கு வரைவிலக்கணம் வழங்கியிருக்கவில்லை. | இந்த அவதானிப்புக்குப் பொருத்தமானதொரு பதிலை பொதுப் படுகடனின் கொள் கை வகுப்போரான நிதி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். எம்.எல். ஏ. இன் படி பொதுப் படுகடன் தொடர்பான ஒரு முகவர் தொழிற்பாட்டையே வங்கி மேற்கொள்கின்றது. | பொதுப் படுகடன் முகாமைத்துவத்தி ன் நோக்கங்கள் மற்றும் செயற்பாடு களை வரையறுத் துரைப்பதற்காக பொதுப் படுகட னில் உள்ளடங் கும் கடன் வகைக ளை நிச்சயிக்க அல்லது பொதுப் படுகடனிற்கு வரை விலக்கணமளிக்க தேவையான நட வடிக்கைகளை எடுத்தல் வேண் டும். |
| vi. | கடன் பெறுவதற்கான காசுத் தேவை மற்றும் கடன் பெறுவதற்கான மூலங்கள் என்பன திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தால் தீர்மானிக்கப்படுகின்றன. கடன் பெறுவத ற்கான மூலங்கள் உட்பட சொல்லப்பட்ட காசுத் தேவையின் அடிப்படையில், குறித்த கடன்பெறுதல் திட்டம் வங்கியின் உள்நாட்டு படுகடன் முகாமைத்துவக் குழுவால் மாதந்தோறும் பரிந்துரைக்கப்பட்டு வங்கியின் ஆளுநரால் அங்கீகரிக்கப்படுகின்றது. அதன்படி, வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களம் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் சர்வதேச பிணை முறிகளை வழங்குவதற்கான ஏலங்களை நடத்துகின்றது. அரசாங்க கடன் பத்திர வெளியீடுகள் மீதான கடன் தகவல்கள் மற்றும் குறித்த தரப்புக்களால் அரசாங்கத்தின் சார்பாக பெற்றுக் கொள்கின்ற ஏனைய கடன்கள் தொடர்பில் நிதி அமைச்சிடமிருந்தும் வங்கியின் திணைக்களங்களிலிருந்தும் பெறப்பட்ட ஏனைய கடன் தகவல்களைப் பயன்படுத்தி நிலுவையிலுள்ள மத்திய அரசின் கடனை வங்கி | பொதுப் படுகடன் விபரங் களை மத்திய வங்கி அதன் சொந்த மூலங்களிலிருந்தும் இரண்டாம் தர மூலங்களி லிருந்தும் நேரடியாக தொகுக்கின்றது. | நிலுவையிலுள்ள சர்வதேச பிணை முறிகளைத் தவிர வங்கி மேலதிகப் பற்று நிலுவைகள் மற்றும் நிலுவையி லுள்ள வெளிநாட் டுக் கடன்களின் சரியான தன்மை யை உறுதிப்படு த்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண் டும். |

அறிவிக்கின்றது. இருப்பினும், சர்வதேச பிணை முறி நிலுவைகளைத் தவிர நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப் பற்று மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் சரியான தன்மையினை வங்கி உறுதிப்ப டுத்தியிருந்தமை அவதானிக்கப்ப டவில்லை.

vii **முதலாந்தர வணிகர் ஒருவரின் முறையற்ற நடவடிக்கைகள்**

ஒரு குறிப்பிட்ட முதலாந்தர வணிக கம்பனியொன்று (பீடி) தொடர்பில் 2011 முதல் 2015 வரை பொதுப்படுகடன் திணைக்களத்தால் (பீடீடீ) நடாத்தப்பட்ட பரிசோதனைகளிலிருந்து, எந்தவொரு முதனிலை வணிகராலும் கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டிய சட்டங்கள், மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் / நெறிப்படுத்தல் களின் அதிகமான வரம்பு மீறல்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. பொதுபடுகடன் திணைக்களத்தால் அவதானிக்கப்பட்ட குறிப்பிட்ட முதனிலை வணிகர் (பீடி) தொடர்பான பிரதான வரம்பு மீறல்கள் பின்வருமாறு.

- நேர்மாற்று மீள் கொள்வனவுகளில் பெரும்பாலானவை (குறிப்பிட்ட முதல் நிலை வணிக கம்பனியால் கடனுக்கு வழங்கப்பட்டவை) குறித்த முதல் நிலை வணிக கம்பனியின் பிடிப்புக் கம்பனியிடம் காணப்படுகின் றமை.
- நேர் மாற்று கொள்வனவு கடன் வழங்கல்களுக்கு எதிராக போது மான பிணைகளினை பெற்றுக் கொள்ள தவறியமை.
- ஒரு தடவையில் பொருந்தாத உயர் எதிர்மறையினை பேணுகின்ற வேளையில் நிகழத்தக்க நிதியிடல் திட்டம் ஒன்று காணப்படாமை.
- வாடிக்கையாளருடன் கைச்சாத் திடப்பட்ட பிரதான மீள் கொள்வனவு உடன்படிக்கைகள் இல்லாமை.
- வாடிக்கையாளர்களிடம் இருந்து மீள் கொள்வனவு கடனை பெறுவதற்காக போதிய பிணைகள் வழங்கப்படாமை.

குறிப்பிட்ட முதல் நிலை வணிக கம்பனிக்கு எதிராக வங்கியால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக வாடிக்கையாளர்களிடம் இருந்து மீள் கொள்வனவுக்காக போதுமற்ற பிணைய ங்கள் வழங்கப்படாமை போன்ற வரம்பு மீறல்கள் மீண்டும் மீண்டும் செய்யப்பட் டிருந்தன.

அரசாங்கப் பிணைகளின் முதலீட்டாளர்களின் பாதுகா ப்பை மேம்படுத்துவதற்காக பின்வரும் நடவடிக்கைகளை வங்கி எடுத்துள்ளது.

- முதல் நிலை வணிக கம்பனிகளின் மேற்பார் வை பணியானது வங்கிய ல்லா நிதி நிறுவனங்க ளின் மேற்பார்வை திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- முதல் நிலை வணிக கம்பனிகளின் ஒழுங்கபடு த்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு முதல் நிலை வணிக கம்பனிகளுடன் தொடர்பு டைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்துதல்கள் மீளாய்வு செய்யப்படுகின் றன.
- பிணைமுறிக் கணக்கு களின் மாற்றங்கள் இடம் பெறுகையில் அவை எஸ்எம்எஸ் மற்றும் மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படுகின்றன.
- நிபந்தனைகளை மீறுவோ ருக்கான தண்டங்களை உள்ளடக்கி கொள்வன வுக் கடன் மற்றும் மறுகொள்வனவுக் கடன் கொடுக்கல் வாங்கல்க ளிற்கான அரசாங்கப் பிணையங்களிற்கு கட் டாய ஒதுக்கல் தொடர் பில் நெறிப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்களுக் கு ஏற்பட்ட நட்ட த்தினை மீட்பத ற்கான சாத்திய மான நடவடிக் கைகள் மற்றும் எதிர்காலத்தில் அவ்வாறான நிகழ் வுகளினை தடுப்ப தற்கு அவசிய மான நடவடிக்கை களை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | இறுதியாக 2016 ஜனவரி 04 அன்று வங்கியானது குறிப்பிட்ட முதல் நிலை வணிக கம்பனியின் முகாமைத்துவத்தை அரச வங்கியொன்றிற்கு ஒப்படைத்திருந்தது. 2016 சனவரி 04 இல் உள்ளவாறான மீள் கொள்வனவு கடன் வாங்குதலுக்கான பிணைகளின் பற்றாக்குறை காரணமாக அட்டுறு வட்டியுடன் கூடிய முதலீட்டின் மீள அறவிட முடியாத தொகை ரூபா. 7.2 பில்லியனாக இருந்தது. மீளப் பெறமுடியாத தொகையில், உள்வாரியான நிதிகளை கையாளும் வங்கியின் நான்கு திணைக்களங்களுக்கு ரூபா. 2.1 பில்லியன் மீளப் பெறமுடியாததாக தோன்றியது.<br><br>மேற்குறிப்பிட்ட அறவிடப்பட முடியாதுள்ள முதலீட்டின் எந்தவொரு தொகையும் வங்கியின் நான்கு திணைக்களங்கள் உள்ளிட்ட வாடிக்கையாளர்காளால் 2020 ஒக்தோபர் வரையிலும் அறவிடப்பட்டிரு க்கவில்லை. | | |
| viii | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட நிதித் தீர்ப்பனவுகள், பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு மற்றும் அரச பிணையக் கொடுக்கல் வாங்கல்களின் உரிமையினை பதிவு செய்தல் ஆகியவற்றிற்கு வசதியளிக்கும் லங்கா தீர்ப்பக முறைமையின் வரையறைகள் பின்வருமாறு.<br><br>• CSL பிணையங்கள் கணக்கில் வைத்திருக்கும் பிணையங்கள் (உட னடி கொள்(முதல்) வாடிக்கையாள ரின் சம்மதம் இன்றி முதல் நிலை வணிகரால் அகற்றப்பட முடியும். (லங்கா பாதுகாப்பு முறைமையி னால் எவ்விதக் கட்டுப்பாடுகளும் அறிமுகப்படுத்தப்படவில்லை.)<br><br>• CRP பிணைய கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பிணைய ங்களின் உரிமையாளர்களை இண ங்காண்பது சிரமமாக இருத்தல்.<br><br>• CRP பிணையக் கணக்கிக் கீழ் பதிவு செய்யப்பட்ட பிணையங்கள் மீது வங்கியால் செலுத்தப்பட்ட கூப்பன் வருமானம் மற்றும் முதிர்வு வருமானம் என்பவற்றின் பயனா ளியை அடையாளம் காண்பதில் சிரமம் காணப்படுதல்.<br><br>• லங்கா பாதுகாப்பு முறைமையின் முதல் நிலை வணிகருக்கும் அவர்களுடைய வாடிக்கையாளர் களுக்கும் இடையிலான எதிர்பார்க் கப்பட்ட தொகை, திரும்பல் | 25.03.2019 முதல் ஸ்கிரிப் லெஸ் அரசாங்க பிணை களின் செயற்பாடுகள் குறி த்த நிகழ்நேர அறிவிப்பை பி.டி.டி அறிமுகப்படுத்தியு ள்ளது.<br>எந்த நேரத்திலும் (24x7) தங்கள் கடன்பத்திரக் கண க்கு தொடர்பான செயல்பாடு களைக் கண்டுகொள்வதற் காக வாடிக்கையாளர்க ளுக்கு அவர்களின் கடன் பத்திரக் கணக்கிற்கான இணையதள அடிப்படை யிலான அணுகல் முறை தற்போது கிடைக்கிறது.<br><br>பிணை ஒதுக்கீடுகளை அதிகாரமின்றி அகற்றுதல் தொடர்பில் லங்கா செக்யூர் முறைமையில் கட்டுப்பாடு களை விதிப்பது தொழில் நுட்ப ரீதியாக சாத்தியமாக இல்லை. ஏனெனில் அதிகா ரமற்ற அகற்றுதலை அங்கீக ரிப்பதற்கு அல்லது அங்கீக ரிக்காமலிருப்பதற்கு இந்த முறைமை உணர்திறன் கொண்டதாக இல்லை. | முதலீட்டாளர்க ளைப் பாதுகாக் கும் நோக்கத்தி ற்காக எந்தவொரு பி.டி. இனாலும் செய்யப்படக்கூடிய வரம்பு மீறல்க ளைத் தடுப்பதற்கு தேவையான நட வடிக்கைகளை எடுத்தல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மீள் கொள்வனவின் திரும்பல் விலை போன்ற தொடர்புடைய தகவல்கள் பதிவு செய்யப்படாமை.<br><br>• கொடுக்கல் வாங்கல்களுக்காக மீள் கொள்வனவினை (REPO) மற்றொரு பிணையாக பதிலீடு செய்யாமல் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களை அகற்றுவதை தவிர்ப்பதற்கு எந்தவொரு கட்டுப்பாடும் லங்கா பாதுகாப்பு முறைமையில் இல்லாமை. | | |
| ix | முதனிலை வணிகரொருவர் அவர்கள் பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை மீறுகின்ற போது முதனிலை வணிகர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்பட முடியும் என்று லங்கா தீர்ப்பனவு முறைமையின் செயற்பாடுகளுக்காக வங்கியால் வெளியீடு செய்யப்பட்ட லங்கா தீர்ப்பனவு முறைமையின் 2.1 ஆம் வெளியீட்டின் (2013) 2.2 ஆம் பிரிவு கூறுகிறது. மேலும், பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணைப்பத்திரங்கள் கட்டளைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவு மற்றும் 2019 டிசம்பர் 20 ஆந் திகதிய 2019 இன் 01 ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் வழிகாட்டல் (மறு கொள்முதல் மற்றும் மீள்- மறு கொள்முதல் கொடுக்கல் வாங்கல்கள்) இன் படி வணிகரின் நேரடி பங்குபற்றலுக்கு (டிடிபி) எதிராக அபராதம் விதிக்கப்பட முடியும். எவ்வாறாயினும், இந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த வங்கிக்கு முடிந்தி ருக்காமையால் எந்தவொரு வணிகருக்கு எதிராகவும் அபராதம் விதிக்கப்பட்டிருக்க வில்லை. | அத்தகைய அபராதங்களை நேரடியாக அந்தச் சட்டங்க ளின் ஊடாக விதிப்பதற்கு வெளிப்படையான அதிகாரம் இல்லாத காரணத்தால் அபராதங்களை விதிப்பது தொடர்பில் சட்ட மற்றும் இணக்கப்பாடுகள் திணை க்களம் (எல்.சி.டி) குறிப்பிட்ட சட்ட விதிகளின் (அதாவது, குறிப்பிடப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்கள்) சட்டபூர்வ மான தன்மை குறித்து கவனம் செலுத்தியுள்ளது. இந்த விடயத்தை நிவர்த்தி செய்வதற்கான மாற்றுவழி ஏற்பாடுகளை வங்கி பரிசீ லித்து வருகின்றது. முன் மொழியப்பட்ட பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணைப்பத்திரங்கள் கட்டளை சட்டத்தில் இத்தி ருத்தங்களை சேர்த்துக் கொள்வதற்கு அவை அதில் (ஆர்.எஸ்.எஸ்.ஓ) உள்ளடக் கப்பட்டுள்ளன. | கூறப்பட்ட விடய த்தை தீர்த்துவை க்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண் டும். |
| x | வாடிக்கையாளரின் நலனுக்கு எதிராக செயல்படும் முதன்மை விற்பனையா ளர்களுக்கு எதிராக அபராதம் விதிக்க பொருத்தமான கட்டமைப்பை உருவாக்க நாணய சபை 2015 செப்டம்பர் இல் பி.டி.டி. இற்கு அறிவுறுத்தல் வழங்கியது. இருப்பினும், அத்தகைய பொருத்தமான கட்டமைப்பொன்று 2020 அக்டோபர் இறுதி வரை கூட உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | ஆர்.எஸ்.எஸ்.ஓ. மற்றும் உள்நாட்டு திறைசேரி உண் டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளிற்கான திரு த்தங்களை ஒரு குழு தயாரித்ததுள்ளதுடன், இவை சட்டமா அதிபர் திணைக்க ளத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. | கூறப்பட்ட விடய த்தை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான கட்டமைப்பு உரு வாக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| xi | திருத்தப்பட்ட 1937 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணைப்பத்திரங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4 இன் படி, இந்த கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள ஒவ்வொரு கடனுக்கும் (திறைசேரி முறிகளை வழங்குதல்) நிதி என்ற விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அது குறித்து வர்த்தமானியில் அறிவித்தலை வெளியிடுதல் வேண்டும். இருப்பினும், 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான அத்தகைய கட்டளைகள் 2020 ஜூன் இறுதி வரை கூட வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருக்கவில்லை. மேலும், 2008 முதல் 2017 வரையிலான கட்டளைகள், கட்டளைச்சட்டத்தின் பிரிவு 4 இற்கு முரணாக வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் உண்மையான விளை வுகளின் அடிப்படையில் அதற்கு அடுத்துவரும் ஆண்டில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தன. | ஆர்.எஸ்.எஸ்.ஓ. இற்கான தொடர்புடைய திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. | கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவதற்கு அல்லது கட்டளைச் சட்டத்தில் திருத்தத்தங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| ஊ. | ஆசிய கிளியரிங் யூனியன் (ஏ.சி.யு) என்பது ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் பங்கேற்கும் மத்திய வங்கிகளிடையிலான உள்ளக பிராந்திய கொடுக்கல் வாங்கல் கொடுப்பனவுகளின் பல்தரப்பு அடிப்படையில் தீர்வு காணும் ஒரு பொறிமுறையாகும். ஒவ்வொரு ஏ.சி.யு பங்கேற்பாளரின் தேறிய தீர்வு நிலை இரண்டு மாத காலப்பகுதியில் வைத்திருக்கும் நாளாந்த நிலுவையிலுள்ள மீதியின் அடிப்படையில் கணக்கிடப்படு வதுடன் அடுத்த மாதத்தின் நான்கு வேலை நாட்களுக்குள் தீர்வுகள் இடம்பெறும். மீளாய்வாண்டில் வட்டி விகிதம் 1.6 சதவீதம் முதல் 2.51 சதவீதம் வரை (2018 - 1.45 சதவீதம் மற்றும் 2.28 சதவீதம்) பரவுண்டு காணப்பட்டது. ஐ.சி.யூ பொறிமுறையின் கீழ் தீர்வு தொடர்பான வங்கியின் கணக்குகளுக்கான அனைத்து வரவுகளும் அந்தந்த மதிப்பீட்டுத் திகதிகளில் இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கிகளால் செய்யப்படுதல் வேண்டும். மேலும் இரண்டு மாதங்களின் முடிவில் தீர்க்கப்பட வேண்டிய தொகையை வங்கி முதலீடு செய்கிறது. அதன்படி, வங்கி மீளாய்வாண்டில் அமெரிக்க டாலர் 9.17 மில்லியன் (ரூபா 1,638.8 மில்லியன்) தொகையையும் முன்னைய ஆண்டில் அமெரிக்க டாலர் 5.98 மில்லியன் (ரூ .992 மில்லியன்) தொகையையும் ஐ.சி.யு. இற்கு வட்டிச் செலவாக செலுத்தியிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் வைத்திருந்த தொகையைப் பயன்படுத்தி ஈட்டிய முதலீட்டு வருமானம் முறையே அமெரிக்க டாலர்கள் 5.19 மில்லியன் (அண்ணளவாக ரூபா 929.9 மில்லியன்) மற்றும் அமெரிக்க டாலர்கள் 3.22 மில்லியன் (அண்ணளவாக ரூபா 534.5 | ஐ.சி.யூ நடைமுறை விதிகளின் அடிப்படையில், கடன் பெறுநர் என்ற வகையில் வங்கியானது கடனாகப் பெற்ற தொகையை இன்டர்-கொன்டினென்டல் எக்ஸ்சேஞ்ச் (ஐ.சி.இ) ஆல் வெளியிட்டுள்ள ஒரு மாத அமெரிக்க டொலர் வைப்பு விகிதத்தில் செலுத்துதல் வேண்டும். தீர்வுக் காலத்திற்கு செல்லுபடியாகும் வட்டி விகிதம் முன்னைய கலண்டர் மாதத்தின் கடைசி வாரத்தின் முதல் வேலை நாளின் இறுதியில் காணப் பட்ட விகிதமாகும். எவ்வாறாயினும், இந்த நிதிகளின் முதலீடுகள் தீர்வுக் காலம் முழுவதும் சந்தையில் கிடைக்கக்கூடிய வைப்பு விகிதத்தில் உயர் தரவரிசைப்படுத்திய தரப்புக்களிடமிருந்து நிகழ்கின்றன. இது சந்தை நிலைமைகள் காரணமாக செலுத்தப்பட்ட மற்றும் பெறப்பட்ட வட்டிக்கு உள்ளார்ந்த ஏற்றத்தாழ்வை உருவாக்குகிறது.<br>இது ஒரு இலாப நோக்கத்துடன் செயல்படுத்தப்படுவதில்லை. அத்துடன், இரண்டு மாத சுழற்சிகளில் ஏசியூ மீதிகளை திரட்டு | ஐ.சி.யு இல் மேலதிக வட்டிச் செலவைக் குறைப்பதற்கு சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன்) ஆகக் காணப்பட்டமையால், மீளாய்வாண்டிற்காக வங்கி அமெரிக்க டாலர் 3.98 மில்லியன் (ஏறத்தாழ ரூபா 708.9 மில்லியன்) மற்றும் ஏ.சி.யு பொறிமுறையின் கீழ் முன்னைய ஆண்டிற்காக 2.76 மில்லியன் அமெரிக்க டாலர் (ஏறத்தாழ ரூ. 457.5 மில்லியன்) தொகையை செலவிட்டிருந்தது. | தலானது சில மேலதிக குறுகியகால திரவத்தன்மை யை வழங்குவதுடன் இக்கா லகட்டத்தில் வெளிவாரி ஒதுக்கங்களின் அளவையும் மேம்படுத்துகின்றது. | |
| எ. | சில்லறை நாணயங்கள் தொடர்பில் சர்வதேச கூறுவிலைகளை கோருவதன் மூலமாகவோ அல்லது ஏற்கனவே உள்ள வழங்குனர்களிற்கு கட்டளைகளை இடுவதன் முலமாகவோ கொள்வனவு செய்வதற்கான இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கான அதிகாரத்தை 2012 ஜுன் 27 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவை நாணயச் சபைக்கு வழங்கியிருந்தது. இருப்பினும், ஏற்கனவே உள்ள வழங்கு னர்களிற்கு கட்டளைகளை வழங்குவ தற்கான சூழ்நிலைகளை வங்கி குறிப்பிட்டிருக்கவில்லை. | நாணயங்களை கொள்வனவு செய்வதற்கு மிகவும் பொரு த்தமான நடைமுறையைத் தீர்மானிப்பதற்கும், சர்வதேச கூறுவிலைகளை கோரலாமா அல்லது நாணயங்களைத் தயாரிக்கையில் தற்போது ள்ள வழங்குனர்களிற்கு கட்டளைகளை வழங்கலாமா என்பதைத் தீர்மானிப்பதற்கும் தற்றுணிபு அதிகாரத்தை அமைச்சரவை நாணயச் சபைக்கு வழங்கியுள்ளது. | கூறப்பட்ட விடய த்தை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண் டும். |
| ஏ. | **பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் செயற்திட்டங்கள்** | | |
| | வங்கியால் நிதியளிக்கப்பட்ட 8 செயற்திட் டங்களுடன் தொடர்புடைய மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான மொத்தம் ரூபா 1.4 பில்லியன் நிறுத்திவைத்த வருவாய் (2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற் கான நிதிநிலைமை கூற்றுக்கான குறிப்பு இல. 56.7 இன் படி) வங்கியின் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | 2020.03.16 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் படி, பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தால் பராமரிக் கப்படும் கடன் திட்டங்கள் வங்கிக்கு உரித்தற்றவை என நாணய சபை முடிவு செய்ததுடன் (இதனை ஆரம் ப்பிப்பதற்கான நிதி வங்கி யால் வழங்கப்பட்டது) வங்கி குறித்த கடன்களின் பாதுகா வலராக மட்டுமே செயல்படு கிறது. அதன்படி, இந்த கடன் திட்டங்களுடன் தொடர்புடைய அந்தந்த சொத்துக்கள், வருமானம் மற்றும் செலவுகள் அந்தந்த திட்டங்களின் தனிப்பட்ட நிதிநிலைமை கூற்றுக்களில் மட்டுமே பதிவு செய்யப்ப டுவதுடன் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அவை பதிவு செய்யப்படுவதில்லை. | கூகூறப்பட்ட விடய த்தை நிவர்த்தி ப்பதற்கு தேவை யான நடவடிக் கைகளை எடுத் தல் வேண்டும். |
| ஐ. | **உள்ளக நிதியைக் கையாளும் வங்கியின் திணைக்களத்தால் செய்யப்பட்ட முதலீடுகள்** | | |
| | உள்ளக நிதியைக் கையாளும் வங்கியின் நான்கு திணைக்களங்களால் (அதாவது பிராந்திய அபிவிருத்தி திணைக்களம், வங்கி மேற்பார்வைத் திணைக்களம், நிதித் திணைக்களம் மற்றும் பதவியணிச் சேவைகள் முகாமைத்துவத் திணைக்களம்) ஒரு முதலாந்தர | வங்கியின் உள்ளக நிதிக ளின் ஒட்டுமொத்த முதலீட்டு இடரைத் தணிக்கும் பொரு ட்டு முதலீட்டு செயல்பா ட்டை மையப்படுத்தியதன் மூலம் 2016 மார்ச் மாதத் தில் நிதித் | எதிர்காலத்தில் இதுபோன்ற சம்ப வங்களைத் தடுப் பதற்காக தற்போ தைய நடைமுறை களுடன்இணங்கி |

| | | | |
|---|---|---|---|
| | வணிகருடன் (பி.டி) மேற்கொள்ளப்பட்ட மீள் மறு-கொள்முதல் கொடுக்கல் வாங்கல்களுடன் (மறு-ரெப்போ முதலீடுகள்) தொடர்புடைய முதலீடுகளுடன் சம்பந்தப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வங்கியின் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கியுள்ள வங்கியின் நான்கு திணைக்களங்களுடன் சம்பந்தப்பட்ட பொதுவான மற்றும் பிரதான அவதானிப்புகள் பின்வருமாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளன. | திணைக்களத் தில் ஒரு "மையப்படுத்த ப்பட்ட முதலீட்டு பிரிவு" நிறுவப்பட்டது. ஒரு பாதுகாவலரை நியமி ப்பது உட்பட சி.டி.எஸ். இல் தொடர்புடைய பயனாளிகள் கணக்கில் பிணையங்கள் ஒதுக்கப்படுவதை உறுதி செய்வதற்கு சில நடவடி க்கைகள் எடுக்கப்பட்டுள் ளன. | ஒழுகுதல் வேண் டும். |
| i | 2010 ஆகஸ்ட் 19, அன்று நடைபெற்ற கூட்டத்தில் நாணய சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட முதலீடுகளுக்கான வழிகாட்டுதல்களின் படி, முதலீடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முதலீட்டாளரால் மத்திய வைப்பக முறைமையிலுள்ள (சிடிஎஸ்) மறு-ரெப்போ முதலீடுகளுக்கான பாதுகாப்பு பிணைகளை சரிபார்த்தல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு முதலீடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்குறி த்த பி.டி.யுடன் செய்யப்பட்ட மறு-ரெப்போ முதலீடுகளுக்கான பாதுகாப்பு ஒதுக்கீட்டை தொடர்புடைய சி.டி.எஸ். இலுள்ள பிணைகளுடன் அந்த திணைக்களங்கள் சரிபார்த்தன என்பதற்கான எந்த ஆதாரமும் காணப்படவில்லை. | முதலீட்டாளருக்கு அறிவிக் காமல் மறுகொள்வனவு ரெப்போ கொடுக்கல் வாங்கல் முதிர்ச்சியடையும் முன்னர் மற்றொரு பிணைப் பாதுகாப்பை மாற்றாமல் பிணைப்பத்திரங்களை அகற் றுவதற்கான சாத்தியக் கூறுகள் தற்போதும் சி.டி.எஸ். இல் காணப்படுகி ன்றது. வங்கிகள் / முதன்மை வணிகர்களால் முதலீட்டா ளரிற்கு அறிவிக்காது கொள் வனவு செய்த அரசாங்க பிணையங்களை நீக்குதல் தற்போதும் சி.டி.எஸ். இல் சாத்தியமாக உள்ளது. | |
| ii | மேலே குறிப்பிடப்பட்ட முதலீடுகளுக்கான வழிகாட்டுதல்களின் படி, பி.டி.க்களால் மறு-ரெப்போ முதலீடுகளுக்கான பாதுகாப்பு ஒதுக்கீட்டில் 15 சதவீத ஒதுக்கெல்லை தேவைப்படுகின்றது. எவ்வாறாயினும், குறித்த திணைக்களங்கள் சி.டி.எஸ். இலுள்ள பாதுகாப்பு ஒதுக்கீட்டை 15 சதவிகித எல்லையின் ஊடாக பரிசோதனை செய்தன என்பதற்கான எந்த ஆதாரமும் காணப்படவில்லை. மேலும், 15 சதவிகித எல்லை தொடர்பான எந்தவொரு ஏற்பாடும் குறித்த திணைக்களங்களிற்கும் மேற்படி பி.டி. இற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட முதன்மை மறு கொள்முதல் உடன்படிக் கையில் (எம்.ஆர்.ஏ) உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது, பதிவு செய்ய ப்பட்ட பங்குகள் மற்றும் பிணைப்பத்திரங்கள் கட்ட ளைச் சட்டம் மற்றும் உள்ளூர் திறைசேரி உண்டி யல்கள் கட்டளைச் சட்டத் தின் கீழ் வழங்கப்பட்ட ஸ்கிரிப்லெஸ் திறைசேரி முறிகள் மற்றும் ஸ்கிரிப் லெஸ் திறைசேரி உண்டிய ல்களிலுள்ள வணிகர் நேரடியான பங்கேற்றலின் மறு கொள்முதல் மற்றும் மீள்- மறு கொள்முதல் கொடுக்கல் வாங்கல்கள் குறித்த 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வழிகாட் டலில் ஒதுக்கு எல்லைக் கான தேவை வரையறைத்து ரைக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இதுபோன்ற சம்ப வங்களைத் தடுப்ப தற்காக தற்போ தைய நடைமுறை களுடன்இணங்கி ஒழுகுதல் வேண் டும். |
| iii | குறித்த பி.டி. ஆனது எம்.ஆர்.ஏ உடன் இணங்காதிருந்தமை (எம்.ஆர்.ஏ இன் பிரிவு 2 மற்றும் 6 இன் படி போதுமான | தற்போது, பாதுகாப்பு தீர்ப்பனவுகள் தொடர்பான நிகழ்நேர அறிவிப்புகள் | எதிர்காலத்தில் இதுபோன்ற சம்ப வங்களைத் தடுப் |

| | | | |
|---|---|---|---|
| | பிணைப்பத்திரங்களை ஒதுக்காமை) அந்த திணைக்களங்களால் 2015 அக்டோபர் இற்கு முன்னர் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், அந்த திணைக்களங்கள் சி.டி.எஸ் மூலம் உருவாக்கப்பட்ட மாதாந்த கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் மற்றும் வைத்திருக்கப்படும் பிணைப் பாதுகாப்பு அறிக்கைகளைப் பெற்றிருந்தமையாலும் மேலும் அவை பதிவியிணர் சேவை முகாமைத்துவ திணைக்களம் தவிர்ந்த சி.டி.எஸ் களை நிகழ்நிலையில் பார்வையிடும் வசதியைப் பெற்றிருந்த மையாலும் அவற்றால் அந்த மீறல்களை அவதானித்திருக்க முடிந்திருக்கும். | ஸ்கிரிப்லெஸ் செக்யூரிட்டீஸ் செட்டில்மென்ட் சிஸ்டம் (எஸ்எஸ்எஸ்எஸ்) இலிருந்து மின்னஞ்சல் மூலம் பெறப்ப டுகின்றன. மேலும், பிணை யங்களாக வைக்கப்பட்டுள்ள பத்திரங்களின் கிடைக்கும் தன்மை மற்றும் போதுமான அளவு சம்பந்தப்பட்ட நிதி நிர்வாகத் திணைக்களங்க ளால் வாரந்தோறும் சரிபா ர்க்கப்பட்டு அறிக்கையிடல் வரிசை திணைக்களத்தின் ஊடாக குறித்த திணைக் களத் தலைவருக்கு அறிவிக் கப்படுகின்றது. மேலும், தற்காலிக சரிபார்ப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. | பதற்காக தற்போ தைய நடைமுறை களுடன்இணங்கி ஒழுகுதல் வேண் டும். |
| iv | மேலே குறிப்பிடப்பட்ட முதலீடுகளுக்கான வழிகாட்டுதல்களின் படி, சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தொடர்பில் உத்தியோகத்தர் கள் தீர்மானம் மேற்கொள்கையில் சந்தை நிலைமைகள் மற்றும் முதலீடு செய்யப்படும் பி.டி. க்களின் சிறந்த நிலவரம் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், அந்த திணைக்களங்கள் மேற்குறித்த பி.டி. இனால் எம்.ஆர்.ஏ உடன் இணங்காதிருந்தமையை (போதுமான பிணைகளை ஒதுக்காமை போன்றவற்றை) அவதானித்திருக்கவில்லை என்பதால் அந்த திணைக்களங்கள் குறித்த வழிகாட்டுத லுடன் இணங்கி ஒழுகியிருக்கவில்லை. | தற்போது, இடர் முகாமைத் துவத் திணைக்களம், எ.ஃ.ப்.டியின் வரவேற்பு அலுவலகம் மற்றும் அனை த்து நிர்வாகத் திணைக் களங்களும் நாணய சபை யின் அங்கீகாரம் அளிக்கப் பட்ட பிரயோகிக்கத்தக்க வழிகாட்டுதலின் (ஐ.ஜி) அடிப்படையில், சந்தை நிலைமைகள் மற்றும் முதன்மை வணிகர்களின் கடன் நன்மதிப்பு குறித்து விழிப்புடன் உள்ளன. | எதிர்காலத்தில் இதுபோன்ற சம்ப வங்களைத் தடுப்ப தற்காக தற்போ தைய நடைமுறை களுடன்இணங்கி ஒழுகுதல் வேண் டும். |
| v | 2010 ஆகஸ்ட் 19 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நாணய சபை அங்கீகாரம் வழங்கியிருந்த முதலீட்டுக் கொள்கையின் படி, நிதிகளிற்காக 100 சதவீத மூலதனப் பாதுகாப்பு பேணப்படுதல் வேண்டும். இருப்பினும், மறு ரெபோவின் முதிர்ச்சிக்கு முன்னர் மற்றொரு பாதுகாப்பை மாற்றாமல் ஒதுக்கப்பட்ட பிணைப் பத்திரங்களை அகற்றும் வாய்ப்பு முதன்மை வணிகருக்கு காணப்படுகின்றமையால் திறைசேரி உண்டியலகள் மற்றும் திறைசேரி முறிகளின் மறு-ரெப்போவின் மீதான முதலீட்டின் மூலதனப் பாதுகாப்பு கேள்விக்குரியாக உள்ளது. அதன்படி, மறு-ரெப்போவில் முதலீடு செய்வதற்கான தீர்மானத்தை எடுப்பதில் நிதிகளின் மூலதன பாதுகாப்பு குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். மேலும், மறு-ரெப்போ முதலீடுகளுக்கான பாதுகாப்பு ஒதுக்கீடுகள் சி.டி.எஸ். இல் முதலீடு செய்யப்பட்ட நிதிகளுடன் தொடர்புடைய இடரை குறைப்பதற்கான ஒரு வழியாக அடிக்கடி பரிசோதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அந்த பி.டி.யுடன் மறு- | தற்போது, 18.12.2019 அன்று நாணய சபையால் அங்கீக ரிக்கப்பட்ட முதலீட்டு கொள் கை அறிக்கை மற்றும் 2018.05.23 அன்று நாணய சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஐ.ஜி ஆகியவற்றின் அடிப்ப டையில் முதலீடுகள் மேற் கொள்ளப்படுவதுடன் அவற் றில் முதலீட்டு நோக்க ங்கள் மற்றும் உற்பத்திப் பொருள் மற்றும் சம்பந்த ப்பட்ட தரப்புக்களின் வரம்பு கள் தெளிவாக வரையறுத்து ரைக்கப்பட்டுள்ளன. | எதிர்காலத்தில் இதுபோன்ற சம்ப வங்களைத் தடுப்ப தற்காக தற்போ தைய நடைமுறை களுடன்இணங்கி ஒழுகுதல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரெப்போவில் முதலீடு செய்வதற்கான தீர்மானத்தை எடுப்பதில் முதலீட்டிற்கான இடர் (நிதிகளின் மூலதன பாதுகாப்பு உட்பட) அந்த திணைக்களங்களால் அளவிடப்பட்டது என்பதற்கான எந்த ஆதாரமும் காணப்படவில்லை. | | |
| vi | மேலே குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் தங்கள் ரெப்போ முதலீடுகளிற்காக எந்தவொரு பிணைகளும் குறித்த பி.டி. இனால் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை 2015 அக்டோபர் முதல் அவதானித்திருந்ததுடன் முதலீடுகளை மீளப்பெறுவதற்கு அவை முடிவு செய்திருந்தன. எவ்வாறாயினும், குறித்த பி.டி எதிர்கொள்ளும் இறுக்கமான திரவத்தன்மை பிரச்சினை காரணமாக, அந்த பி.டி.யுடன் செய்யப்பட்ட முழு முதலீடுகளையும் அவர்களால் மீளளிக்க முடிந்திருக்கவில்லை. எனவே, பிணைப் பத்திரங்கள் இன்றியே மீதமுள்ள முதலீடுகளை இயக்கிச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. அதன்படி, திரட்டப்பட்ட வட்டியுடன் கூடிய முதலீட்டின் நிலுவைத் தொகை (இதனை ஒரு இழப்பாகக் கருதலாம்) 2016 ஜனவரி 04 ஆம் தேதி நிலவரப்படி (மோசமான வரம்பு மீறல்கள் மற்றும் திரவத்தன்மை சிக்கல்கள் காரணமாக பி.டி.யின் முகாமைத்துவம் தேசிய சேமிப்பு வங்கியில் ஒப்படைத்திருந்த திகதி) ரூபா 2.1 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 2020 செப்டம்பர் 18 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2.9 பில்லியன் ஆகும். | ஒப்புக்கொள்ளப்பட்டது. | இழப்பை மீட்டெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| vii | மேலே குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள், குறித்த பி.டி.யுடன் சம்பந்தப்பட்ட மறு-ரெப்போ முதலீடுகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கை மற்றும் முதலீடுகளுக்கான வழிகாட்டுதல்களிற்கு அமைவாக செயற்பட்டிருக்கவில்லை. மேற்படி அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கை மற்றும் முதலீடுகளுக்கான வழிகாட்டுதல்களுடன் அத்திணைக்களங்கள் முறையாக இணங்கி ஒழுகியிருந்திருப்பின், மேற்கூறிய திணைக்களங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற நிதிக்கு மேற்கூறிய பி.டி. இன் முதலீடு தொடர்பாக ஏற்பட்டிருந்த இழப்பு தவிர்க்கப்பட்டிருக்கலாம் அல்லது குறைக்கப்பட்டிருக்கலாம். | முதலீட்டுக் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்களுடன் இணங்குவதன் மூலம் இழப்பைத் தவிர்க்கலாம் அல்லது குறைக்க முடிந்திருக்கும் என்ற நிலைப்பாட்டுடன் முதலீட்டுத் திணைக்களம் உடன்படவில்லை.<br>தற்போது, அந்த பி.டி. யிலிருந்து உரிய தொகையை அறவிடுவதற்கு வங்கி சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. | இழப்பை மீட்டெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | நாணய விதிச்சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம், ‘‘வங்கியானது அதன் உரிமைக் கோரல்கள் எவற்றையேனும், திருப்திப் படுத்தும் விடயத்தில் ஏதாவது வழியில் வருமானம் பெறுவதற்கு கைத்தொழில் அல்லது ஏனைய கையேற்பில் நேரடியான | வங்கியின் நாணய சபையானது ஒரு நியாயமான காலப்பகுதியை அனுமதிப்பதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆதனங்கள் தவிர்ந்த | சட்டத்தில் கூறப்பட்ட ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆர்வத்தை கொண்டிருக்கக்கூடாது'' இந்த ஏற்பாட்டிற்கு முரணாக, வங்கிக்கு சொந்தமான பல கட்டிடங்கள் உத்தேசித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதன்மூலம் ரூபா 346.8 மில்லியன் வாடகை வருமானமொன்றை வங்கி ஈட்டியிருந்தது. | மேற்குறிப்பிட்ட ஆதனங்கள் தொடர்பான குத்தகை / வாடகை உடன்படிக்கை களை நிறுத்துவதற்கு 2017.10.05 ஆந் திகதி தீர்மானித்துள்ளது. | |
| ஆ. | நாணயச் சட்டச் சட்டத்தின் பிரிவு 90 (2) இன் படி, அரசாங்கப் பத்திரங்களில் திறந்த சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இத்தகைய ஈடுபாடு அவசியமாயிருப்பின், வங்கி அதன் கடனை ஈடுபாட்டை மேற்கொள்வதற்கு ஏதுவாக குறுகிய கால கடன் பத்திரங்களை போதுமான அளவு வைத்திருப்பதன் அவசியத்தை கருத்திற் கொள்ள வேண்டும். இந்த ஏற்பாட்டுக்கு முரணாக, நீண்டகால கடன் பத்திரங்களாகக் கருதப்படும் திறைசேரி முறிகள் வங்கியின் திறந்த சந்தை நடவடிக்கைகளின் நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. அதன்படி, மீளாய் வாண்டின் இறுதியில் ரூபா 50.2 பில்லியன் திறைசேரி முறிகள் வங்கியால் பேணப்பட்டி ருந்தன. | வட்டி வீத ஸ்திரத்தன் மையை உறுதி செய்வத ற்காக உள்நாட்டு பணச் சந்தைக்கு நிரந்தர திரவத் தன்மையினை வழங்கு வதன் அவசியத்தை கருத் தில் கொண்டு நாணய சபையின் அங்கீகாரத்துடன் இரண்டாம் தரச் சந்தையில் திறைசேரி முறிகளை ஏலத்தில் வங்கி நேரடியாக கொள்வனவு செய்திருந்த தேயன்றி அரசாங்க கடன் பத்திரங்களை சேகரித்து வைத்திருக்கும் நோக்கத் திற்காக அல்ல. | சட்டத்தில் கூறப்பட்ட ஏற்பாடுகளுடன் இண ங்கி ஒழுகுதல் வேண் டும். |
| இ. | **கட்டிட ஆதனத்தின் பெறுமதி குறைவடைதல்** | | |
| i | 2014 செப்டம்பர் 01 இல் வைட் அவேயிஸ் (White Aways) கட்டிடம் ரூபா 100 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 வரைக்கும் ரூபா 325.42 மில்லியன் தொகை செலவிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறிப்பிட்ட கட்டிடம் ரூபா 187 மில்லியனாக மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், அந்த நாளில் உள்ளவாறு ரூபா 232.12 மில்லியன் மீள்மதிப்பீட்டு நட்டமொன்று ஏற்பட்டது. அதன் பிரகாரம், கட்டிடத்தின் பெறுமதி 28 மாதங்களைக் கொண்ட குறுகிய காலப்பகுதிக்குள் கணிசமாக சரிவடைந்து ள்ளது.<br>2020 செப்டம்பர் 07 அன்று அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட விலை மதிப்பீட்டின்படி, வைட் அவேஸ் கட்டிடம் ரூபா 202.25 மில்லியன் ஆக விலை மதிப்பிடப்பட்டிருந்ததுடன் இது முன்னைய மதிப்பீட்டை விட ரூபா 15.25 மில்லியன் உயர்வாக காணப்பட்டது. | 100 ஆண்டுகளுக்கும் மேலான இந்த கட்டிடத்தின் கட்டமைப்பு வலுப்படுத்த லுடன் தொடர்புடைய சில குறிப்பிடத்தக்க செலவுகள் விலை மதிப்பீட்டில் முழுமை யாக பிரதிபலிக்கப்படாமல் இருக்கலாம். | எதிர்காலத்தில் கட்டி டங்களைப் பெறுவதி லும் நிர்மாணிப்பதிலும் சரியான அக்கறை செலுத்துதல் வேண் டும். |
| ii | கிளிநொச்சி கட்டிட தொகுதியின் நிர்மாணிப்பானது 2016 மே 31 அன்று ரூபா 167.93 மில்லியன் மூலதனமாக்கலுடன் | பெறுமதி சரிவடைதல் குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்கப்பவில்லை. | எதிர்காலத்தில் கட்டி டத்தைப் பெறுவதிலும் நிர்மாணிப்பதிலும் சரி |

| | | | |
|---|---|---|---|
| | பூரணப்படுத்தப்பட்டதுடன் இது 2016 திசெம்பர் 31 வரை ரூபா 100.84 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டு மேம்படுத்த ப்பட்டது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிளிநொச்சி கட்டிட தொகுதியின் மீள்மதிப்பு பெறுமதி ரூபா 169.5 மில்லியன் ஆக இருந்ததுடன் மீள்மதிப்பு நட்டம் ரூபா 96.87 மில்லியனாக இருந்தது. ஆகவே, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதி 7 மாதங்களைக் கொண்ட குறுகிய காலப்பகுதிக்குள் கணிசமான அளவு சரிவடைந்திருந்தது.<br><br>2020 செப்டம்பர் 07 அன்று அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட விலை மதிப்பீட்டின்படி, கிளிநொச்சி கட்டிடம் ரூபா 172.3 மில்லியன் ஆக விலை மதிப்பிடப்பட்டிருந்ததுடன் இது முன்னைய மதிப்பீட்டை விட ரூபா 2.8 மில்லியன் உயர்வாக காணப்பட்டது. | | யான அக்கறை செலு த்துதல் வேண்டும். |
| iii | பிணைமுறிகள் கற்கை நிலையத்தின் நிர்மாணிப்பானது 2016 செப்தெம்பர் 30 இல் பூர்த்தியாக்கப்பட்டதுடன் ரூபா 212.2 மில்லியன் தொகையொன்று மூலதனமாக்கப் பட்டது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிணைமுறிகள் கற்கை நிலையத்தின் மீள்மதிப்பு பெறுமதி ரூபா 170 மில்லியனாக இருந்ததுடன், மீள் மதிப்பீடு நட்டமாக ரூபா 40.79 மில்லியன் ஏற்பட்டது. ஆகவே, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதி 3 மாதங்களைக் கொண்ட குறுகிய காலப்பகுதிக்குள் கணிசமான அளவு சரிவடைந்திருந்தது.<br><br>அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்கள த்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டின்படி. 2020 செப்டம்பர் 07 அன்று பிணைமுறிகள் கற்கைகள் நிலையத்தின் பெறுமதியானது ரூபா 131 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது முன்னைய மதிப்பீட்டை விட ரூபா 39 மில்லியன் குறைவாகக் இருந்தது. | பெறுமதி சரிவடைதல் குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்கப்பவில்லை. | எதிர்காலத்தில் கட்டி டத்தைப் பெறுவதிலும் நிர்மாணிப்பதிலும் சரி யான அக்கறை செலு த்துதல் வேண்டும். |

### 3.3 குறைவாகப் பயன்படுத்திய நிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த பல ஆண்டுகளுக்கும் மேலாக பாங்கா நாசியோனேல் டெல் லாவரோவுடன் நொஸ்ரோ (பி.என்.எல்.) கணக்கில் உள்ள ரூபா 35.8 மில்லியன் (யூரோ 175,789) நிதியில் இருந்து எந்தவொரு கொடுக்கல் வாங்கலையும் வங்கி மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்கை மூடிவிடுவதற்கு நாணய சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.<br><br>எவ்வாறாயினும், மேற்படி தீர்மானம் குறித்து பி.என். எல் கருத்துத் தெரிவிக் | இந்த விடயத்தை தீர்த்துவைக்க தேவையான நட வடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கையில், அந்தக் கணக்கு இத்தாலிய அரசாங்கத்தால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட பொருட்களின் உதவியுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் இத்தாலிய வெளியுறவு அமைச்சால் நிர்வகிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கணக்கை மூடுவதற்கு இத்தாலிய வெளியுறவு அமைச்சிடமிருந்து அங்கீகாரம் தேவைப்படுகின்றது. | |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவியணி வகுப்பு தரம் 1 முதல் III (1), முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு தரம் I முதல் V மற்றும் அலுவலக உதவியாளர் வகுப்பு தரம் I முதல் III ஆகிய பதவிகளுக்கு நாணய சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு காணப்படவில்லை. 2020 செப்டம்பர் 14 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான உண்மையான பணியாளர்கள் எண்ணிக்கை முறையே 477, 570 மற்றும் 155 ஆகும். | வங்கியின் மூலோபாய நோக்கங்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் ஒவ்வொரு திணைக்களத்தின் நோக்கத்தையும் மாற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதன் காரணமாக அந்த பதவிகள் வரையறைத்துரைக்கப்படாததுடன் இது அவ்வப்போதைய தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதைப் பொறுத்துள்ளது. | அவ்வப்போதைய தேவைகளை கருத்தில் கொண்டு திருத்தப்படக்கூடிய விதத்தில் குறிப்பிட்ட பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு நிச்சயிக்கப்படுதல் வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும் 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க செயற்படுதல் வேண்டும். இருப்பினும், வங்கியின் குறிக்கோள்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பான இலக்குகளின் கீழ் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதற்கான மைல்கற்கள் மற்றும் அத்தகைய இலக்குகளின் அடைவுகளை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வங்கி நிலையான அபிவிருத்தி இலக்குகளை (எஸ்டிஜிஸ்) நேரடியாக நடைமுறைப்படுத்தும் நிறுவனம் ஒன்றல்ல, மாறாக பொருளாதார மற்றும் விலை ஸ்திரத்தன்மை மற்றும் நிதி கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதன் மூலம் அதற்கு வசதியளிப்போராகவே அது உள்ளது. எனவே, மத்திய வங்கியின் முக்கிய செயல்பாடுகள் பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப் | அந்த நிகழ்ச்சி நிரலுக்கு வங்கி இணங்குகிறதா என்பதை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

படுத்த உதவும் சுற்றாடலுக்கு ஆதரவளித்து இறுதியில் எஸ்.டி.ஜி. இற்கு உதவுவதாகும்.

அந்தந்த திணைக்களங்களை ஒருங்கிணைத்து, எஸ்.டி.ஜி. களை அடைவதற்கான முன்னேற்றத்தை எளிதாக்குவதற்கும் வங்கியின் மூலோபாய மற்றும் செயல் திட்டங்களை வகுப்பதற்கும் ஆளுநரால் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.